24.01.2025 STC 24/2024 PW1. ஈடில்சன் அரசு

கடந்த 30.08.2024ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்ட நிலையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நான் 18 வருடங்களாக வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் சுயமாக தொழில் செய்து வருகிறேன் என்று சொன்னதை பொறுத்து என்ன என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால், நான் வழக்கறிஞர் தொழிலை தனியாக சுயமாக செய்து வருகிறேன்.

2. நான் வழக்கறிஞர் தொழில் தவிர்த்து வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னுடைய உறவினர் இல்லை என்றால் சரிதான். அவர் என் நண்பர் இல்லை என்றால் சரிதான். பக்கத்து ஊர்க்காரர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ன தேவைக்காக பணம் பெற்றார் என்பதை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால், ஆம் சொல்லியுள்ளேன்.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தூத்தூக்குடியில் மீன் வாங்கி வியாபாரம் செய்து வருகிறார். எனக்கு எத்தனை வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கில் சொன்ன தொகைக்கு எவ்வளவு ரூபாய் வட்டிக் கேட்டேன் என்றால், நான் வட்டிக்கு கொடுக்கவில்லை. ஒரு மாதம் கைமாத்து ரூபாய்க்கு கேட்டார், கொடுத்தேன். மேற்படி வழக்கு காசோலை தொகையை எவ்வாறு எடுத்துக் கொடுத்துள்ளேன் என்பதை வழக்காவணத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. நான் வருமானவரி செலுத்தும் அளவுக்கு வசதியானவர் இல்லை என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. நான் குழித்துறை, பத்மநாபபுரம், இரணியல், நாகர்கோவில் ஆகிய நீதிமன்றங்களில் இதே போல் 15க்கும் மேலான வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் டெல்பின் அஜிதா என்பவர் மீது STC 384/2023 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனக்கு ஞாபகமில்லை. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 383/2023 என்ற காசோலை வழக்கினை கவிதா என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

5. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 382/2023 என்ற காசோலை வழக்கினை அருள் சுதன் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 215/2023 என்ற காசோலை வழக்கினை அகிலா என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 686/2023 என்ற காசோலை வழக்கினை காளியம்மாள் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

6. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 685/2021 என்ற காசோல வழக்கினை வினோத் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 684/2021 என்ற காசோலை வழக்கினை சுரேஷ்குமார் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

7. அதே போல் நாகர்கோவில் விரைவு நீதிமன்றத்தில் STC 66/2021 என்ற காசோலை வழக்கினை ரெக்சலின் பிந்து என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 24/2020 என்ற காசோலை வழக்கினை ஞானபிரகாசம் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அதே போல் அதே நீதிமன்றத்தில் STC 18/2020 என்ற காசோலை வழக்கினை நிஷா செலின் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

8. கிட்டதட்ட ரூபாய் 50இலட்சத்துக்கு அதிகமாக நான் காசோலை வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால், அது தவறு. நான் பணம் கொடுத்ததாக சொன்னதை பொறுத்து மேற்படி சமயத்தில் யார் யார் உடன் இருந்தார்கள் என்ற சங்கதியை நான் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை.

9. காசோலை வங்கியில் இருந்து திருப்பப்பட்ட தேதி 27.06.2024 என்றால் சரிதான். வழக்கறிவிப்பு 17.07.2024 தான் அனுப்பினேன் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரோ அல்லது அவரது மனைவியோ எனது வங்கிக் கணக்கில் இதுவரை ஏதாவது பணம் போட்டுள்ளார்களா என்றால் அது எனக்குத் தெரியவில்லை.

10. எனக்கு வருமான வரவு சம்மந்தமாக சங்கதிகளை தெளிவுப்படுத்த எனது வங்கி பரிவர்த்தனை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால், தாக்கல் செய்யலாம்.

11. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தினசரி சந்தையில் மீன் வியாபாரம் செய்யும் நபர்

என்றாலும், என்னிடம் 10ஆயிரம் ரூபாய் வட்டிக்கு வாங்கியதாகவும், அதில் வட்டியாக 2500ரூபாயை முதலில் என்னுடைய வங்கிக் கணக்கில் வரவு வைத்த பிறகு மீத தொகையை கொடுத்ததாகவும் அதை தினசரி தவணைக்கு கொடுத்ததாகவும், மேற்படி தொகையை வாங்கும் போது கையொப்பம் இட்ட காசோலையை நான் பெற்றுக் கொண்டேன் என்றாலும் சரியல்ல.

12. காசோலையில் உள்ள கையொப்பம் தவிர்த்து மற்ற சங்கதிகளை யார் எழுதினார்கள் என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவருடன் ஒரு நபரை அழைத்து வந்தார். அவர் தான் பூர்த்தி செய்துக் கொடுத்தார். அந்த உடன் வந்த நபரின் ஊர், முகவரி எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி சங்கதியை நான் எனது வழக்காவணங்களில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.